அங்கத்தினர்களின் வேண்டுகோளின் படி கழிந்த 12.02.2012–ல் நடைபெற்ற "A" வகுப்பு பொதுக்கூட்ட தீர்மானத்தின்படி கோபுரம் புனரமைத்து கும்பாபிஷேகம் நடத்த தீர்மானிக்கப்பட்டதோடு அதற்கு வேண்டிய கும்பாபிஷேகம் மற்றும் திருப்பணிகளை செய்ய சமுதாய அங்கத்தினர்களிடம் உறுப்பினர் வரியாக ரூ.3000–ம் மேலும் கோயில் திருப்பணி வகைக்கு உபயதாரர் களிடம் கூடுதல் நன்கொடை கேட்டுப்பெறவும் தீர்மானிக்கப்பட்டது.

கோவில் திருப்பணியினை 26.04.2012 வியாழக்கிழமை மகோ நட்சத்திரத்தில் காலை 10.30 மணிக்கு தொடங்க நிச்சயித்திருப்பதால் நம் சமுதாயத்தார் அனைவரும் தவறாது கலந்து ஒத்துழைத்து சிறப்பிக்க அன்புடன் வேண்டுகிறோம்.

இவண்,

**நிர்வாகிகள்**

| | |
|---|---|
| திரு.C. **விஜயகுமார்** | தலைவர் ஸ்ரீசிரவி தேவஸ்தானம் |
| திரு.A. **வேலாயுதன்பிள்ளை** | உதவிதலைவர் ஸ்ரீசிரவி தேவஸ்தானம் |
| திரு.N. **சிவசுப்பிரமணியபிள்ளை** | செயலாளர் ஸ்ரீசிரவி தேவஸ்தானம் |
| திரு.K. **மாதவன்பிள்ளை** | இணைச்செயலாளர் ஸ்ரீசிரவி தேவஸ்தானம் |
| திரு.S. **சிவகுமார்** | பொருளாளர் ஸ்ரீசிரவி தேவஸ்தானம் |
| திரு.S. **பொன்னப்பதாஸ்** | உதவிதலைவர் செட்டிசமுதாயம் |
| திரு.S. **கோலப்பாபிள்ளை** | செயலாளர் செட்டிசமுதாயம் |
| திரு.P. **அண்ணமலைப்பிள்ளை** | இணைச்செயலாளர் செட்டிசமுதாயம் |

குறிப்பு :

கோவில் திருப்பணிகள் மற்றும் உறுப்பினர்வரி அனுப்பவிரும்பும் அங்கத்தினர்கள் பாரதஸ்டேட் வங்கி திங்கள் நகர் கிளையில் S.B.A/c. Number. 30307159211–ல் அனுப்பி வைக்கவும்.

**கோவில் நிகழ்ச்சிகளை**

**www.ssrvderaniel.com -ல் பார்த்துமகிழவும்**

Galaxy, 9894823477

**இரணியல் கீழத்தெரு செட்டிசமுதாய**

**ஸ்ரீ சிங்கரட்சக விநாயகர் தேவஸ்தானம்**

கீழத்தெரு, இரணியல்,
நெய்யூர் – 629 802.

# கும்பாபிஷேக திருப்பணி
# அறிவிப்பு விழா அழைப்பிதழ்





உ

ஸ்ரீ சிங்கரட்சக விநாயகர் துணை

**இரணியல்கீழத்தெரு செட்டிசமுதாய**
**ஸ்ரீ சிங்கரட்சக விநாயகர் தேவஸ்தான**
**கும்பாபிஷேக திருப்பணி**
**அறிவிப்பு அழைப்பிதழ்**



அன்புடையீர்!

சுமார் கி.பி. 1300 ஆண்டுகளில் தென்இந்தியாவில் சமணம், பௌத்தம், சைவம், வைஷ்ணவம் ஆகிய மத கோட்பாடுகள் செழித்திருந்தது.

கற்புக்கரசி கண்ணகி வாழ்ந்த காவிரிபூம் பட்டணத்தில் ஏழூர் செட்டு என்ற பெயரில் பெரும் செல்வந்தராகவும் சைவ இறை நம்பிக்கையுடனும் நம்குல முன்னோர்கள் வாழ்ந்து வந்தார்கள். நம் குல கன்னிகைகள் தங்கம்மை, தாயம்மைக்கு ஏற்பட்ட சூழ்நிலையால் காவிரிவிட்டு இடம் பெயர்ந்து நாம் வணங்கிய தெய்வங்கள் மற்றும் முடிந்த அளவு பொருட்களுடன் வேனாட்டின் தலைநகராம் இரணியல் நல்லூரில் வள்ளியாற்றின் கரைவந்தடைந்ததாகவும் அந்த நாள் சித்திரை மாதம் கடைசி ஞாயிறு ஆயில்யம் வளர்பிறை கொண்ட நன்நாள் ஆகும் என்பது நம் வரலாறு.

நாஞ்சில் நாட்டிலும் வேனாட்டிலும் சமண மத ஆதிக்கம் ஓங்கி இருந்ததால் நாம் கொண்டு வந்த சிவன், பார்வதி, கணபதி மற்றும் நடராஜர் நாட்டியமாடும் கண்ணாடி பிம்பத்தினால் ஆன விக்ரகங்களை மண்ணில் மறைத்து அதன் மீது சமண வழிபாட்டின் அங்கமான நாகரை மேல் வைத்து வணங்கி கொழுக்கட்டை நைவேத்தியம் வைத்து வழிபாடு செய்ததாக நமது சுவடிகள் வாயிலாக தெரியவருகிறது.

நாம் நாடு பெயர்ந்து வந்ததை அறிந்த வேனாட்டு மன்னர் நம்குல பெரியவர் **பிச்சை செட்டியாரை** அழைத்து அன்னாருக்கு அன்று உயர்ந்த பட்டமான **பிள்ளை** என்ற பட்டத்தையும் அளித்து **பிச்சை பிள்ளை மூப்பன்** என்று அவரை முன்னிலை படுத்தி இன்று நாம் வாழும் இடத்தினை வெகுமதியாக வழங்கி கௌரவித்து குடியமர்த்தியதாகவும் அவரது வழித்தோன்றல்கள் தான் நாம் என்பதும் குறிப்பிடதக்க உண்மையாகும்.

கோயில் இல்லா இடத்தில் குடிஇருக்க வேண்டாம் என்ற கோட்பாட்டிற்கு இணங்க நாம் வாழ்ந்துவரும் இடத்தின் மேற்கு திசையில் நம் குலத்தெய்வங்களான விநாயகருக்கு சிங்கரட்சக விநாயகர் என்றும், ருத்ரனுக்கு (சிவன்) மகாதேவன் என்ற நாமத்துடனும், பார்வதிக்கு மீனாட்சி என்ற நாமத்துடனும் தனித்தனி சன்னதி அமைத்து கோபுரம் கட்டி வணங்கி வருகிறோம்.

சுமார் 150 வருடங்களுக்கு முன்னால் நம்குல ஆன்மீக முன்னோர்கள் கோவில் முன்பக்கம் கல் மண்டபம் கட்டி கோயிலை விரிவுபடுத்தினர் அத்துடன் அக்கால சூழ்நிலைக்கேற்ப முத்தாரம்மன், பைரவருக்கு தனி சன்னதி கட்டி வணங்கி வருகின்றனர்.

இடைப்பட்ட இந்த 150 வருட காலத்தில் முத்தாரம்மன் கோவில் திருப்பணியும், விநாயகருக்கு அஷ்ட பந்தனமும் நடந்துள்ளதாக பழைய சுவடிகள் வாயிலாக தெரியவருகிறது. ஆனால் கோபுர புனரமைப்போ, மகாகும்பாபிஷேகமோ நடந்ததாக எந்த தகவலும் இல்லை.

நமது இந்து தர்மப்படி 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கோபுரங்கள் புனரமைத்து கும்பாபிஷேகமும் மூலவர்களுக்கு அஷ்டபந்தனமும் நடத்த வேண்டுமென்பது விதியாகும். ஆகவே நமது சமுதாய